**செய்தி வெளியீடு எண் : 1320** **நாள் : 30.08.2024**

**செய்தி வெளியீடு**

**<u>சென்னை ஃபார்முலா ஸ்ட்ரீட்ரேஸிங் சர்க்யூட்</u>**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் (SDAT) மூலம் சென்னை ஃபார்முலா 4 ரேஸிங் சர்க்யூட் போட்டி மற்றும் இந்தியன் ரேஸிங் லீக் கார் பந்தயம் வரும் ஆகஸ்ட் 31 மற்றும் செப்டம்பர் 1 ஆகிய தேதிகளில் இரவு நேர ஸ்ட்ரீட் சர்க்யூட் பந்தயத்தை நடத்த உள்ளது. தெற்காசியாவிலேயே இரவு நேர ஃபார்முலா 4 ஸ்ட்ரீட் பந்தயத்தை நடத்தும் முதல் நகரமாக சென்னை திகழ்கிறது.

3.5 கிமீ சுற்றளவு கொண்ட சர்க்யூட் – தீவு திடல், போர் நினைவுச்சின்னம், நேப்பியர் பாலம், சுவாமி சிவானந்தா சாலை மற்றும் மவுண்ட் ரோடு ஆகியவற்றில் அமைக்கப்பட்டுள்ளது. இது தெற்காசியாவிலேயே மிக நீளமான ஸ்ட்ரீட் சர்க்யூட் என்பது குறிப்பிடத்தக்கது.

**ஆகஸ்டு 31**ம் தேதி நடைபெறும் பந்தயம் மதியம் 2.30 மணிக்கு தொடங்கி JK FLGB F4, F4 Indian Championship, Indian Racing League ஆகிய பந்தயங்களுக்கான பயிற்சி சுற்று நடைபெறும். அதனை தொடர்ந்து சாகச நிகழ்ச்சி மற்றும் தகுதி சுற்று நடைபெறும்.

**செப்டம்பர் 1**ம் தேதி நடைபெறும் பந்தயம் மதியம் 2.30 மணிக்கு தொடங்கி JK FLGB F4, F4 Indian Championship, Indian Racing League ஆகிய பந்தயங்கள் நடைபெறும். இதற்கிடையில் சாகச நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

**கிராண்ட்ஸ்டாண்ட் இருக்கை விவரங்கள்:**

| கிராண்ட்ஸ்டாண்ட் | இடம் | வாகன நிறுத்துமிடம் | அனுமதி நுழைவாயில் |
|---|---|---|---|
| கிராண்ட்ஸ்டாண்ட்–1 | அண்ணா சாலை (முத்துசாமி பாலம் அருகில்) | MMC கிரிக்கெட் மைதானம் | பாக்ஸ் ஆபிஸ் 1 (நுழைவு வாயில்–2) |
| கிராண்ட்ஸ்டாண்ட்–2 | சுவாமி சிவானந்தா சாலை | கலைவாணர் அரங்கம் | பாக்ஸ் ஆபிஸ் 3,4 மற்றும் 5 (நுழைவு வாயில்– 4) |
| கிராண்ட்ஸ்டாண்ட்–3 | | | |
| கிராண்ட்ஸ்டாண்ட்–4 | | | |
| கிராண்ட்ஸ்டாண்ட்–5 | | | |

**தீவுத்திடலில் உள்ள பார்வையாளர் மாடங்களின் விவரங்கள் :**

| பார்வையாளர் மாடம் | இடம் | வாகன நிறுத்துடம் | அனுமதி நுழைவாயில் |
|---|---|---|---|
| தங்கம் / பவளம் | தீவுத்திடல் | சென்னை பல்கலைக்கழகம் / கடற்கரை | பாக்ஸ் ஆபிஸ் 5 (நுழைவு வாயில் 6) சென்னை பல்கலைக்கழகம் அருகில்) |
| HMR/ஸ்பான்ஸ்சர்கள் | தீவுத்திடல் | சென்னை பல்கலைக்கழகம் / கடற்கரை | பாக்ஸ் ஆபிஸ் 5 (நுழைவு வாயில் 6) சென்னை பல்கலைக்கழகம் அருகில்) |
| பிரிமியம் | தீவுத்திடல் | சென்னை பல்கலைக்கழகம் / கடற்கரை | பாக்ஸ் ஆபிஸ் 5 (நுழைவு வாயில் 6) சென்னை பல்கலைக்கழகம் அருகில்) |

**தடைசெய்யப்பட்ட பொருட்கள்:**

பிறருக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய எந்தப் பொருளும் அரங்கிற்குள் அனுமதிக்கப்படாது. மேலும், அவை அனைத்தும் பாதுகாப்பு சோதனைச் சாவடிகளில் பறிமுதல் செய்யப்பட்டு திரும்பத் தரப்படமாட்டது.

- புகையிலை பொருட்கள், தீப்பெட்டிகள், பட்டாசுகள், எளிதில் எரியக்கூடிய திரவங்கள், மதுபானம், பிளேடுகள், கத்திகள், கத்தரிக்கோல், ஆயுதங்கள், பெப்பர் ஸ்பிரே, பெரிய சங்கிலிகள், எந்த வகையான திரவங்களுடனும் உள்ள பாட்டில்கள், துப்பாக்கிகள், சுவிஸ் இராணுவ கத்திகள், லேசர் லைட்டுகள், லைட்டர்கள், மின்–சிகரெட் & வேப்ஸ் போன்றவை

- **விலங்குகள் மற்றும் செல்லப்பிராணிகள்** – வழிகாட்டி நாய்கள் அல்லது அங்கீகரிக்கப்பட்ட சேவை விலங்குகள் தவிர.

- **ஒலி அமைப்புகள்** – ஏர் ஹார்ன்கள், விசில் போன்ற சத்தம் எழுப்பக்கூடிய பொருட்கள், மெகாஃபோன்கள், இசைக்கருவிகள், போர்ட்டபிள் ஸ்பீக்கர்கள்.

- **போதைப்பொருள் –** போட்டி நிகழ்வில் போதைப்பொருட்களைக் பயன்படுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது. ஏதேனும் விதிமீறல் தெரிந்தால் நீங்கள் காவல்துறையிடம் ஒப்படைக்கப்படுவீர்கள்.

- **முகாம் உபகரணங்கள்** – கூடாரங்கள், ஸ்லீப்பிங் பேக்ஸ், குடைகள் அல்லது நிழல் கட்டமைப்புகள் போன்றவை

- **வெளிப்புற உணவு மற்றும் பானங்கள் அனுமதிக்கப்படாது**

- **கண்டைனர் / தண்ணீர் பாட்டில்கள் / கண்ணாடி பாட்டில்கள்** – மூடியுடன் கூடிய பிளாஸ்டிக் பாட்டில்கள், சீல் செய்யப்பட்ட தண்ணீர் பாட்டில்கள், திறந்த தண்ணீர் பாட்டில்கள், டின்கள், கேன்கள்.

- **ட்ரோன்கள் அல்லது வேறு ஏதேனும் அங்கீகரிக்கப்படாத பறக்கும் சாதனம்.**

- **தொழில்முறை ஆடியோ ரெக்கார்டிங் உபகரணங்கள்** – தொழில்முறை ஜூம் லென்ஸ்கள், ஸ்டாண்டுகள், மோனோபாட்கள், ட்ரைபாட்கள், இணைப்பு குச்சிகள் (செல்ஃபி ஸ்டிக்ஸ்) பிற வணிக உபகரணங்களுக்கு அனுமதி இல்லை. (ஊடகங்கள்/பத்திரிகை பணியாளர்களை தவிர)

- **தனியர் வாகனங்கள்** – ஸ்கேட்போர்டுகள், ரோலர்பிளேடுகள், ஸ்கூட்டர்கள், சைக்கிள்கள், வண்டிகள் அல்லது தனிப்பட்ட மோட்டார் பொருத்தப்பட்ட வாகனங்கள் போன்றவை அனுமதி இல்லை. விற்பனையாளர் ஊர்திகள் எந்த வகையிலும் அனுமதி இல்லை.

- **தனிப்பட்ட பொருட்கள்/உபகரணங்கள்** – கைப்பைகள், குடைகள், லேப்டாப், லேப்டாப் பைகள், சூட்கேஸ், பெரிய மின்விசிறிகள், மோட்டார், தலைக்கவசங்கள் போன்றவை (பெண்களின் கைப்பைகள் மற்றும் போர்ட்டபிள் நெக் ஃபேன்கள் தவிர)

- **வீசும்பொருட்கள்** – தண்ணீர் பலூன்கள், முட்டை, பிளாஸ்டிக் பாட்டில் மூடிகள்

- **இழிவு அடையாளங்கள் அல்லது பதாகைகள்** – ஜாதி, மதம், பாலினம், மதம் மற்றும் இனத்திற்கு எதிரான புண்படுத்தும் பதாகைகள் அல்லது தவறான / பாரபட்சமான மொழி.

- **மற்றவை** – ஸ்ப்ரே பெயிண்ட்ஸ், ஃபேண்டம் ஸ்டிக் லைட்ஸ், ஹாம்மோக்ஸ், டோடெம்ஸ் போன்றவை.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu